**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை - 600 025.**

**இளநிலைத் தமிழியல் - பட்டம் (B.A. TAMILOLOGY - Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF - LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் - திசம்பர் 2017**

## P201 மொழிபெயர்ப்பியல்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு - 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
   தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" – இப்பாடலின் ஆசிரியர் யார்?
2. தமிழில் முதல் மொழிபெயர்ப்பு இலக்கியமாக கருதப்படுவது எது?
3. நீதித்துறையில் இருந்து தமிழ் வளர்த்த பெருமக்கள் யாவர்?
4. மொழிபெயர்ப்பின் தனிச்சிறப்பு யாது?
5. மொழிபெயர்ப்பின் நோக்கம் என்ன?
6. பெறுமொழி என்றால் என்ன?
7. குஜராத்தி மொழியில் சிறந்தவைகளாகக் கருதப்படும் புதினங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
8. எதை ஒரு சிறந்த மொழிபெயர்ப்புச் சான்றாகக் காட்டலாம்?
9. சொல் எத்தனை வகைப்படும்? அதன் வகைகள் யாவை?
10. இலக்கண நூல் யாது?
11. துறைச் சொற்களின இயல்புகள் யாவை?
12. புதிய சொல்லைப் படைப்பதில் சிக்கல் ஏற்படின் என்ன செய்ய வேண்டும்?
13. ஆங்கிலமுறைக் கல்வியை வெளியிட்டவர் யார்?

14. தமிழின் முதல் அறிவியல் நூல் எது?

15. ஏவுகணை என்ற சொல் எதன் அடிப்படையில் உருவானது? -

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மொழிபெயர்ப்பாளரின் அடிப்படைத் தகுதிகள் யாவை?
2. முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு என்றால் என்ன?
3. மொழிபெயர்ப்பின் அவசியம் யாது?
4. மொழிபெயர்ப்பினால் இலக்கியத்தில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
5. சொல்லாக்கம் என்றால் என்ன?
6. இரட்டைக்கூட்டுப் பெயர்கள் என்றால் என்ன?
7. மொழிபெயர்ப்புகளின் நெறிமுறைகள் யாவை?
8. நல்ல விளம்பரத்தின் இயல்புகளில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) மொழிபெயர்ப்பின்வரலாறு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பின் பயன்கள் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

2. (அ) மொழிபெயர்ப்பின் வகைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சொல்லாக்க அகராதிகளில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து எழுதுக.

3. (அ) விளம்பர மொழிபெயர்ப்புகளின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) இலக்கிய மொழிபெயர்ப்பு பற்றி விளக்கி வரைக.

***